



## தி.மு.க. என்ற ஆலமரத்தின் வேர்கள் நீங்கள்! எனது மொத்த நம்பிக்கையும் நீங்கள்தான்!

## இந்தத் தேர்தலில் வெல்லப்போவது தமிழ்நாடு அணியா ? டெல்லி அணியா?

# நாம் போராடுவது தி.மு.க.வின் வெற்றிக்காக அல்ல - தமிழ்நாட்டின் வெற்றிக்காக!

### வாக்குச் சாவடி குழுவினருக்கான பயிற்சி மாநாட்டில்

## தலைவர் – முதல்வர் மு.க.ஸ்டாலின் எழுச்சிப் பேருரை!

சென்னை,பிப்.13–

**“தி.மு.க. என்ற ஆலமரத்தின் வேர்கள் நீங்கள்! அறிவாலயத்தின் அஸ்திவாரமே நீங்கள்தான்! என்னுடைய மொத்த நம்பிக்கையும் நீங்கள்தான்! வெல்லப் போவது, தமிழ்நாடு அணியா? டெல்லி அணியா? இதை முடிவு செய்யப் போவதுதான் இந்தத் தேர்தல்! பா.ஜ.க.வின் டப்பா எஞ்சின் முன், திராவிட மாடல் சூப்பர் ஃபாஸ்ட் எஞ்சின் என்றும் தலைகுனியாது! நாம் போராடுவது, தி.மு.க.வின் வெற்றிக்காக அல்ல, தமிழ்நாட்டின் வெற்றிக்காக!” என திருவிடந்தையில் நடைபெற்ற என் வாக்குச் சாவடி வெற்றி வாக்குச் சாவடி – மண்டல வாக்குச் சாவடி குழுவினருக்கான பயிற்சி மாநாட்டில் கழகத் தலைவர் – முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது எழுச்சியுரையில் குறிப்பிட்டார்.**

கழகத்தலைவரும்– முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (11-02-2026) திருவிடந்தையில் நடைபெற்ற ‘என் வாக்குச்சாவடி வெற்றி வாக்குச் சாவடி – சென்னை, விழுப்புரம் மண்டல வாக்குச்சாவடிக் குழுவினருக்கான பயிற்சி மாநாட்டில் கலந்துகொண்டு ஆற்றிய உரை வருமாறு:

2026 தமிழ்நாடு சட்டமன்றத் தேர்தலில், கழகத்தின் வெற்றியை களத்தில் நின்று ஈட்டி வர இருக்கும் ஈட்டி முனைகளே! உங்கள் அனைவரின் உற்சாகத்தையும், நம்பிக்கையையும் பார்த்து, எனக்கும் ‘எனர்ஜி பூஸ்ட்’ கிடைத்த மாதிரி இருக்கிறது.

சென்னை மற்றும் விழுப்புரம் மண்டல BLA-2, BLC, BDA வாக்குச்சாவடிக் குழுவினருக்கான, ‘என் வாக்குச்சாவடி – வெற்றி வாக்குச்சாவடி’ பயிற்சி மாநாட்டில் கலந்து கொண்டு, உங்களை எல்லாம் சந்திப்பதில் நான் மிகுந்த மகிழ்ச்சியடைகிறேன்!

சென்னை மண்டலம் – விழுப்புரம் மண்டலங்கள் என்ற இரண்டு மண்டலங்களைச் சேர்ந்த பாக முகவர்கள் இங்கே வந்திருக்கிறீர்கள். உங்கள் ZONE-இல் 49 தொகுதிகள் அடங்கி இருக்கிறது. அதாவது, தமிழ்நாட்டின் ஐந்தில் ஒரு பங்கு நீங்கள்!

பாக முகவர்கள் பயிற்சி நிகழ்ச்சியையே மாநாட்டைப் போன்று ஏற்பாடு செய்திருக்கும் நம்முடைய மாவட்டக் கழகத்தின் செயலாளர் அருமைச் சகோதரர் செயல்வீரர் அன்பரசன் அவர்களை நான் பாராட்டுகிறேன்! வாழ்த்துகிறேன்! சகோதரர் அன்பரசன் அவர்களைப் பொறுத்தவரையில், கழகத்தில் கொடுக்கப்படும் பொறுப்பாக இருந்தாலும் சரி, ஆட்சி நிர்வாகத்தில் கொடுக்கப்படும் பொறுப்பாக இருந்தாலும் சரி, அதில் தன்னை நிரூபிக்கும் வகையில், சிறப்பாகச் செயல்படக் கூடியவர்! அதேபோன்றுதான் இந்த மாநாட்டையும் சிறப்பாக நடத்தி தன்னை மீண்டும் நிரூபித்திருக்கிறார்!

அதேபோன்று, இந்த மாநாட்டை ஒருங்கிணைத்த சென்னை மண்டலப் பொறுப்பாளர் – கழகத்தின் துணைப் பொதுச்செயலாளர் – தலைவர் கலைஞர் அவர்களால் ‘தகத்தகாய சூரியன்’ என்று போற்றப்பட்ட ஆ.இராசா அவர்களுக்கும் – ‘வேங்கையின் மைந்தன்’ என்று அழைக்கப்படும் மாண்புமிகு வேளாண்மை மற்றும் உழவர் நலத் துறை அமைச்சர் எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம் அவர்களுக்கும், என்னுடைய பாராட்டுகள், வாழ்த்துகள்!



கழகத் தலைவரும், முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (11.2.2026) திருவிடந்தையில் நடைபெற்ற, “என் வாக்குச்சாவடி, வெற்றி வாக்குச்சாவடி”சென்னை மற்றும் விழுப்புரம் மண்டல வாக்குச்சாவடி குழுவினருக்கான பயிற்சி மாநாட்டில் கலந்து கொண்டு, உரையாற்றினார். இம்மாநாட்டில், கழகப் பொருளாளரும், நாடாளுமன்ற உறுப்பினருமான டி.ஆர். பாலு, முதன்மை செயலாளரும், அமைச்சருமான கே.என். நேரு, துணைப் பொதுச் செயலாளர்கள் நாடாளுமன்ற உறுப்பினர் ஆ.ராசா, முன்னாள் அமைச்சர் முனைவர் க. பொன்முடி, அமைச்சர் மு.பெ.சாமிநாதன், அமைச்சர் பெருமக்கள் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம், தா.மோ.அன்பரசன், மா.சுப்பிரமணியன், பி.கே.சேகர்பாபு, ஆவடி சா.மு.நாசர், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ். பாரதி, செய்தி தொடர்பு தலைவர் டி.கே.எஸ். இளங்கோவன், தலைமைக் கழக நிர்வாகிகள், மாவட்ட கழகச் செயலாளர்கள், பல்வேறு அணிகளின் நிருவாகிகள், வாக்குச் சாவடி பாக முகவர்கள், குழு உறுப்பினர்கள், டிஜிட்டல் முகவர்கள் கலந்து கொண்டனர்.

அதேபோன்று, இந்த இரண்டு மண்டலத் திற்குட்பட்ட மாவட்டக் கழகத்தின் செயலாளர்களுக்கும், தோளோடு தோள் நின்று பணியாற்றி இருக்கும் அனைத்து நிர்வாகிகளுக்கும் தலைமைக் கழகத்தின் சார்பில் என்னுடைய வாழ்த்துகளையும் நன்றியையும் நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்!

- சென்னையில் மொத்தம் 21 தொகுதிகள்,
- திருவள்ளூர் மாவட்டத்தில் 6 தொகுதிகள்,
- காஞ்சிபுரத்தில் 10 தொகுதிகள்,
- கடலூர் கிழக்கில் 5 தொகுதிகள்,
- விழுப்புரம் மாவட்டத்தில் 7 தொகுதிகள்

என்று, மொத்தம் 49 தொகுதிகளின் வெற்றியை உறுதி செய்ய நாம் இங்கு கூடியிருக்கிறோம்!

### உங்களிடமிருந்துதான் நம் வெற்றி தொடங்கப் போகிறது!

சென்னையும் – வட தமிழ்நாடும் எப்போதுமே தி.மு.க.வின் கோட்டை என்று மீண்டும் நான் நிரூபித்துக் காட்ட வேண்டும்! எப்போதும் போன்று, உங்களிடம் இருந்துதான் நம்முடைய வெற்றியே தொடங்கப் போகிறது! அதனால்தான், இந்தக் கூட்டத்தையும் இந்த மண்டலத்தில் இருந்து நான் தொடங்குகிறேன்!

தேர்தல் பணி என்று வந்துவிட்டால், கழக உடன்பிறப்புகளை அடித்துக் கொள்ள ஆளே இல்லை! இதை நான் மட்டுமல்ல, கழகத்தின் எதிரிகளே பல நேரங்களில் – பல சந்தர்ப்பங்களில் சொல்லியிருக்கிறார்கள்! அதே வேகம், அதே ஆற்றல், அதே சுறுசுறுப்பு, அதே கவனத்துடன், இந்த முறையும் உழைக்க நீங்கள் தயாரா?

தமிழ்நாடு முழுவதும் அனைத்து பூத்திலும் 100 வாக்காளர்களுக்கு ஒரு உறுப்பினர் வீதம், ஒவ்வொரு பூத்திலும் சராசரியாக 10 வாக்குச்சாவடி குழு உறுப்பினர்களை நாம் நியமித்திருக்கிறோம்! மைக்ரோ மேனேஜ்மெண்ட்–ஆக இருந்தாலும் சரி, மேக்ரோ மேனேஜ்மெண்ட்–ஆக இருந்தாலும் சரி, தேர்தல் களத்தில் தி.மு.க.தான் ஹீரோ!

### எந்தக் கட்சிக்கும் இல்லாத கட்டமைப்பு நம்மிடம் இருக்கிறது!

இந்தியாவில் வேறு எந்தக் கட்சிக்கும் இல்லாத கட்டமைப்பு நம்மிடம் இருக்கிறது! தமிழ்நாட்டில் உள்ள மொத்த பூத்களின் எண்ணிக்கை 75 ஆயிரம்! ஒவ்வொரு பூத்திற்கும் நாம் செட் பண்ணியிருக்கும் ‘மினிமம் டார்கெட்’ எவ்வளவு தெரியுமா? 350 வாக்குகள்! இந்த டார்கெட்டை நாம் அச்சீவ் செய்தாலே, 2 கோடியே 60 லட்சம் வாக்குகளுக்கு மேல் நாம் வாங்கிவிடலாம்.

நான் முன்பே சொல்லியிருந்தேன். இந்தத் தேர்தலில் நாம் கட்டாயம் 2 கோடியே 50 லட்சம் வாக்குகளுக்குக் குறையாமல் வாங்கியாக வேண்டும் என்று சொல்லிருந்தேன். இதை சாத்தியப்படுத்திக் காட்டுவது உங்களின் பொறுப்பு! இதை எப்படி செய்வது? ரொம்ப சிம்ப்பிள்! நீங்கள் ஒவ்வொருவரும் குறைந்தது 40-50 வாக்குகளுக்குப் பொறுப்பேற்றுக் கொள்ளுங்கள்! இதை சக்சஸ்–ஃபுல்லாக செய்தாலே, வெற்றி உறுதி!

### மாநாடு போல் விழா! வாழ்த்துகிறேன் – பாராட்டுகிறேன்!



**பாக முகவர்கள் பயிற்சி நிகழ்ச்சியையே மாநாட்டைப் போன்று ஏற்பாடு செய்திருக்கும் நம்முடைய மாவட்டக் கழகத்தின் செயலாளர் அருமைச் சகோதரர் செயல்வீரர் அன்பரசன் அவர்களை நான் பாராட்டுகிறேன்! வாழ்த்துகிறேன்! சகோதரர் அன்பரசன் அவர்களைப் பொறுத்தவரையில், கழகத்தில் கொடுக்கப்படும் பொறுப்பாக இருந்தாலும் சரி, ஆட்சி நிர்வாகத்தில் கொடுக்கப்படும் பொறுப்பாக இருந்தாலும் சரி, அதில் தன்னை நிரூபிக்கும் வகையில், சிறப்பாகச் செயல்படக் கூடியவர்! அதேபோன்றுதான் இந்த மாநாட்டையும் சிறப்பாக நடத்தி தன்னை மீண்டும் நிரூபித்திருக்கிறார்!**

**அதேபோன்று, இந்த மாநாட்டை ஒருங்கிணைத்த சென்னை மண்டலப் பொறுப்பாளர் – கழகத்தின் துணைப் பொதுச்செயலாளர் – தலைவர் கலைஞர் அவர்களால் ‘தகத்தகாய சூரியன்’ என்று போற்றப்பட்ட ஆ.இராசா அவர்களுக்கும் – ‘வேங்கையின் மைந்தன்’ என்று அழைக்கப்படும் வேளாண்மை மற்றும் உழவர் நலத் துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் அவர்களுக்கும், என்னுடைய பாராட்டுகள், வாழ்த்துகள்!**

ஏற்கனவே ‘ஓரணியில் தமிழ்நாடு’ பரப்புரை மூலமாக, 1 கோடியே 14 லட்சம் குடும்பங்கள் நம் கழகத்துடன் இணைந்திருக்கிறார்கள். இதில், ஒரு வாக்குகூட மிஸ் ஆகாமல், உதயசூரியனுக்கும் – நம்முடைய கூட்டணிக் கட்சி சின்னங்களுக்கும் விழ வேண்டும்!

ஓரணியில் தமிழ்நாடு மட்டுமல்லாமல், எஸ்.ஐ.ஆர். பட்டியல் திருத்தம் மூலமாகவும் ஏற்கனவே 2, 3 முறை, தமிழ்நாட்டின் ஒவ்வொரு வீட்டையும் நாம் நேரில் சந்தித்து ஆதரவு திரட்டி இருக்கிறோம்.

### ஸ்டாலின் மகளிர் படையினர் வீடு வீடாகப் பிரச்சாரம்!

அடுத்ததாக, ‘ஸ்டாலின் மகளிர் படை’யில் இருக்கும் மகளிரணியினர் வீடு வீடாகப் பிரசாரத்தைத் தொடங்கப் போகிறார்கள்.

ஏன் இதையெல்லாம் குறிப்பிட்டுச் சொல்கிறேன் என்றால், நம்முடைய பிரசாரமே அடிமட்டத்தில் இருந்து ஒவ்வொரு குடும்பத்தையும், ஒவ்வொரு வாக்கையும் கவனத்தில் வைத்துதான் உருவாக்கியிருக்கிறோம். மற்ற அனைவரையும் விட, முக்கியமாக நீங்கள்தான் இதைப் புரிந்து கொண்டு செயல்பட வேண்டும். நானோ – அமைச்சர்களோ – மாவட்ட – மண்டல – தொகுதிப் பொறுப்பாளர்களோ – சட்டமன்ற – நாடாளுமன்ற உறுப்பினர்களோ என்னதான் உழைத்தாலும் – உத்திகளை வகுத்தாலும், களத்தில் அதை வெற்றியாக உறுதி செய்யப் போவது நீங்கள்தான்! ஒவ்வொரு வாக்குச் சாவடியையும் வெற்றி வாக்குச்சாவடியாக மாற்ற உழைக்க இருக்கும் நீங்கள்தான் முன்கள வீரர்கள்! உங்கள் உழைப்பில்தான் நாம் ஏழாவது முறையாக ஆட்சிக்கு வரப் போகிறோம்!

எத்தனை டெக்னாலஜி வந்தாலும், எத்தனை புதிய ஊடகங்கள் வந்தாலும், ரிமோட்டில் எத்தனை பேர் நமக்காக வேலை செய்தாலும், தேர்தல் பிரசாரத்தின் பேசிக்ஸ்–தான் மிக முக்கியம்! அதற்கு என்ன செய்ய வேண்டும்? நீங்கள் ஒவ்வொருவரும் 100 வாக்காளர்களைத் தேர்தலுக்குள், குறைந்தபட்சம் 5 முறையாவது சந்தித்தாக வேண்டும்.

### மக்களைச் சந்தித்து நமது அணிக்கு வாக்குக் கேட்டுக் கொண்டே இருங்கள்!

நான் ஏற்கனவே விருதுநகர் கூட்டத்தில் சொன்ன ஒரு விஷயத்தை, இந்தக் கூட்டத்திலும் திரும்ப அழுத்திச் சொல்ல விரும்புகிறேன். பரம்பரை பரம்பரையாகத் தி.மு.க.விற்கு வாக்களிக்கும் குடும்பமாக இருந்தாலும் சரி, இதுவரை நமக்கு வாக்களிக்காத குடும்பமாக இருந்தாலும் சரி, பரப்புரையின் கடைசி நிமிடம் வரை மக்களைச் சந்தித்து வாக்கு கேட்டுக் கொண்டே இருக்க வேண்டும்! தேர்தல் என்று வந்துவிட்டால், மக்கள்தான் எஜமானர்கள்! அதனால், நம்முடைய திராவிட மாடல் ஆட்சியின் சாதனைகளையும் – திட்டங்களையும், அதனால் தமிழ்நாட்டில் இருக்கும் ஒவ்வொரு குடும்பமும் பயனடைந்து வருவதையும், ஒவ்வொருவரிடமும் விளக்கமாக எடுத்துச் சொல்லுங்கள்.

தமிழ்நாட்டு மக்கள் மத்தியில் pro-incumbency–தான் நிலவுகிறது! ஆளுங்கட்சிக்கு எதிரான மனநிலை, எங்குமே இல்லாத நிலைதான் இன்றைக்கு இருக்கிறது! இதை அப்படியே நமக்கு ஆதரவான வாக்குகளாக மாற்றி, வெற்றியை அறுவடை செய்வது உங்கள் கையில்தான் இருக்கிறது.

2021-இல் இருந்ததைவிட, தமிழ்நாடு முழுவதும் நமக்கான வரவேற்பும், ஆதரவும் கூடி இருக்கிறது. 2024 நாடாளுமன்றத் தேர்தலில் நாம் வாங்கிய வாக்குகளைச் சட்டமன்றத் தொகுதிவாரியாகப் பார்த்தால், தெளிவாகத் தெரியும்.

தொடர்ச்சி 6–ஆம் பக்கம்